முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மணப்பாறை

<u>அசல் வழக்கு எண். 1/2018</u>

<u>டிடபிள்யு - 1. சின்னச்சாமி</u>

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 - ஆம் நாள் ஆகிய இன்று பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய DW1 ஆவது நபரின் வாக்குமூலம் (1969 .ம் ஆண்டு 54 .வது விதியின் 9=வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. G. செல்வம், உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் = சின்னச்சாமி | வயது = |
| தகப்பனார் பெயர் = | சமயம் = |
| கிராமம் = | தொழில் = |
| தாலுக்கா = | ஜாதி = |

<u>07.03.2019</u>

<u>சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.</u>

நான் வழக்கில் பிரதிவாதி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும்.

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுத படிக்க தெரியாது. எனக்கு கையொப்பம் மட்டும் தான் போடத் தெரியும். வாதி இவ்வழக்கு தொடர்ந்த பின் ஒரு வருடமாக என்னை விரட்டுவதற்காக குடியிருக்கிறார். நான் எனது தரப்பு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண், பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி மற்றும் அவரது சகோதர் தான் தாவா இடத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சீட்டு போட்டு குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி தனது மூதாதையர் காலம் முதல் சுமார் 30 வருட காலமாக தாவா இடத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அது குறித்து வாதி பெயரில் பட்டாவும் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடன் உடன் பிறந்தவர் பழனிச்சாமி ஆகும். தாவா இடம் நத்தம் என்றால் சரியல்ல. வாதியை தாவா இடத்தில் இருந்து காலி செய்ய நான் முயற்சி செய்தேன் என்றும் அவர் அது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும்

சொன்னால் சரியல்ல. அந்த புகார் தொடர்பாக என்னை அந்த இடத்தில் இருந்து காலி செய்யுமாறு காவல் அதிகாரி என்னிடம் எழுதி வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா இடத்திற்கு அருகில் எனது அண்ணன் குடியிருப்பதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா இடத்தில் இருந்து சுமார் அரை கி.மீ தள்ளி நானும் எனது அண்ணனும் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் ராமசாமி வாத்தியார் வடக்கிலும் பழனிச்சாமி வீட்டிற்கு மேற்கில், தெற்கில் தங்கம்மாள், அதற்கு கீழ்புறத்தில் எனது ஆஸ்பெஸ்டாஸ் சீட்டு போட்ட வீடு உள்ளது. மேற்சொன்ன நான்கெல்லை தவறானது என்றால் சரியல்ல. வாதி தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும் அதற்குரிய ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. வாதியிடம் தாவா இடத்தை கிரயம் கேட்டேன் என்றும் அதற்கு அவர் மறுத்ததால் இவ்வழக்கில் பொய் கட்சி செய்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா இடத்தை நான் அனுபவித்து வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா இடத்தில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி கொடுத்த அறிவிப்பு குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.